## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## ஸ்ரீமத்பாம்பன் ஸ்வாமிகள் அருளிய ”பகை கடிதல்”

---

பகை என்பது வெளியில் இருந்து நமக்கு வருவதே இல்லை. ***”தீதும் நன்றும் பிறர் தர வாரா”.*** நம்முள் இருக்கும் ஆறு வகைப் பகைவர்களின் வெளிப்பாடே வெளியில் ஏற்படும் விதவிதமான பகைவர்கள். இதை முதலில் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.இவற்றை ”ஷட் பகை” என்று நம் முன்னோர்கள் கூறுவர். ஷட் என்றால் ஆறு - 6.ஆறு வகைப் பகைகள் நம்முள் உள்ளன. அவற்றின் மூலம் நம் ஜீவ சக்தி மிகவும் குறைவதால் நாம் நினைப்பதும் வேண்டுவதும் நிறைவேற முடிவதில்லை. பகை கடிதல் என்பது முருகனின் மயில் வாஹனத்தை முன்னிட்டு, ”மயிலே நீ வணங்கி,விரும்பித் தாங்கும் முருகனை என்னுள் கொண்டு வந்து விடு” என்று மயிலை வேண்டுவதாக ஸ்வாமிகள் பாடுகிறார்.

மயில் என்பது ஆணவத்தின் உருவகமான சூரபதுமனின் மறு வடிவாகும். இறைவனைத் தன்னுள் சூர சம்ஹாரம் மூலம் உணர்ந்த அவன் தன்னை இறைவனைத் தாங்கும் மயிலாக மாற்றிக் கொண்டான். மனதில் உள்ள ஆணவப்போக்கை நாம் ஞானதால் உயர்ந்த எண்ணங்களாக மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

மயிலை வணங்குவது என்பது நம் மனதை நாம் வணங்குவதே ஆகும்.எனவே பகை கடிதலைப் பாராயணம் செய்யும் போது முதலில் நம் மனதுள் இருக்கும் ஷட் பகைகள் விலகும்.பின்னர் வெளிப்பகை விலகும்.

**ஷட் பகைகள்**: 1.அளவுக்கு அதிகமாக, தகுதிக்கும் அதிகமான ஆசைப் படுதல். அனைத்தின் மீதும் வெறியுடன் கூடிய ஆசை கொள்ளுதல்.

2.பொறாமை குணம்

3.பொரணி பேசுதல், எப்போதும் பிறரைக் குறை கூறுதல்.

4.கஞ்சத் தனம்

5.தான் மட்டும் நன்றாக இருந்தால் போதும் என்று எண்ணுதல்

6.கோபம்.

## பகை கடிதல்

1.திருவளர் சுடர் உருவே! சிவை கரம் அமர் உருவே!
அருமறை புகழ் உருவே! அமரர்கள் தொழும் உருவே!
இருள் தபும் ஒளி உருவே! என நினை எனது எதிரே,
குருகுஹன் முதல் மயிலே! கொணர்தி உன் இறைவனையே!

2.மறை புகழ் இறைமுனரே, மறை முதல் பகர் உருவே!
பொறைமலி உலகு உருவே! புனநடை தரும் உருவே!
இறை இள முக உருவே! என நினை எனது எதிரே,
குறைவு அறு திருமயிலே! கொணர்தி உன் இறைவனையே!

3.இதரர்கள் பலர் பொரவே, இவண் உறை எனது எதிரே!
மதி ரவி பல என தேர், வளர் சரண் இடை எனமா
சதுரொடு வரு மயிலே! குதி தரும் ஒரு மயிலே!
கொணர்தி உன் இறைவனையே!

4.பவநடை மனுடர்முனே, படர் உறும் எனது எதிரே!
நவ மணி நுதல் அணி ஏர், நகை பல மிடறு அணிமால்
சிவணிய திருமயிலே! திடனொடு நொடி வலமே!
குவலயம் வரும் மயிலே! கொணர்தி உன் இறைவனையே!

5.அழகு உறு மலர் முகனே! அமரர்கள் பணி குகனே!
மழ உரு உடையவனே! மதி நனி பெரியவனே!
இழவு இலர் இறையவனே! என நினை எனது எதிரே!
குழகு அது மிளிர் மயிலே! கொணர்தி உன் இறைவனையே!

6.இணை அறும் அறுமுகனே! இதசசி மருமகனே!
இணர் அணி புரள் புயனே! என நினை எனது எதிரே!
கண பண அரவு உரமே! கலை உற மணி மயிலே!
கொணர்தி உன் இறைவனையே!

7.எளியவ என் இறைவ! குகா! என நினை எனது எதிரே!
வெளி நிகழ் திரள்களைமீன்! மிளிர் சினை எனமிடைவான்
பளபள என மினுமா பலசிறை விரிதரு நீள்
குளிர் மணி விழி மயிலே! கொணர்தி உன் இறைவனையே!

8.இலகு அயில் மயில் முருகா! என நினை எனது எதிரே!
பல பல கள மணியே! பல பல பத மணியே!
கல கல கல எனமா கவினொடு வரும் மயிலே!
குலவிடு சிகை மயிலே! கொணர்தி உன் இறைவனையே!

9.இகல் அறு சிவகுமரா! என நினை எனது எதிரே!
சுகமுனி வரர் எழிலார் சுரர் பலர் புகழ் செயவே
தொகு தொகு தொகு எனவே, சுர நடம் இடும் மயிலே!
குகபதி அமர் மயிலே! கொணர்தி உன் இறைவனையே!

10.கருணை பெய் கன முகிலே! கட முனி பணி முதலே!
கட முனி பணி முதலே! அருணையன் அரன் எனவே!
அகம் நினை எனது எதிரே! மருமலர் அணி பலவே!
குரு பல அவிர் மயிலே! கொணர்தி உன் இறைவனையே!

ஓம் சரவணபவாய நமஹா!